1987 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 இடங்களிலும் ஒதுக்கப்பட்ட இடங்களே ஒவ்வொரு ஆண்டும் பூர்த்தியாவதே கிடையாது. கடைசியாக, 1986 ஆம் ஆண்டை எடுத்துக் கொண்டால்கூட, சென்னையிலே 50 இடங்கள் ஒதுக்கப்பட்டன, 41 பேர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். கடலூரில் 50 இடங்களில் 35 பேர்கள், நாகப்பட்டினத்தில் 50 இடங்களில் 38 பேர்கள், மண்டபத்தில் 60 இடங்களில் 57 பேர்கள், குளச்சலில் 50 இடங்களில் 49 பேர்கள், தூத்துக்குடியில் 50 இடங்களில் 45 பேர்கள், இப்படிக் குறைவாகத்தான் சேர்ந்திருக்கிறார்கள். எனவே, இருக்கிற இடங்களை நிரப்பாமல் மேற்கொண்டு அதிகமாக்குவதிலே அர்த்தமே இல்லை. இருக்கிற இடங்களை நிரப்பியதற்குப் பிறகு அரசு மேற்கொண்டு பரிசீலிக்கும்.

கொடைக்கானலில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

444—(*வினா எண் 9544) **டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மலைப் பகுதியில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன?

(ஆ) அவை எங்கெங்கு உள்ளன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கொடைக்கானல் மலைப்பகுதிகளில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது.

(ஆ) அது மன்னவனூரில் செயல்பட்டு வருகிறது.

டாக்டர் த. முகம்மது சலீம்: தலைவர் அவர்களே, கொடைக்கானல் மேல்மலைப்பகுதி, கீழ்மலைப்பகுதி என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. மேல்மலைப் பகுதியில் பூண்டி, மன்னவனூர், கவுஞ்சி, போளூர் போன்ற 14 கிராமங்கள் வருகின்றன. அதில் மன்னவனூரில் மட்டும் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. அது போதுமானதாக இல்லாததால் நடைபாதை இல்லாத இடங்களிலிருந்து மக்கள் டோலிகளைக் கட்டிக்

கொண்டு மக்கள் கொடைக்கானலுக்கு வருகிறார்கள். ஆகவே மேல் மலைப்பகுதியில் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட வேண்டும். கீழ்மலைப் பகுதியில் தாண்டிக் குடிக்கு அடுத்துள்ள மங்களகொம்பு, தவசிப்பட்டி, கிருஷ்ணா பட்டி போன்ற இடங்களில் ஏதாவது ஒரு இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த வேண்டும். அதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு சில விதிகளை வைத்திருக்கிறோம். சுற்று வட்டாரத்தில் எட்டு கி.மீ., தூரத் திற்கு எந்த மருத்துவமனையும் இருக்கக்கூடாது என்றும், 30 ஆயிரம் மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்றும் வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல் வதைப் போல மலைப்பிராந்தியமாக இருக்கிற காரணத்தால் இதுபற்றி தனியாகப் பரிசீலிக்கலாம்.

டாக்டர் த. முகம்மது சலீம்: தலைவர் அவர்களே, தவசிப் பட்டி என்பது தாண்டிக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து 35 கி.மீ. தூரத்தில் இருக்கிற இடமாகும். அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தால் கீழ்மலைப் பகுதியில் உள்ள மக்கள் அங்கே சென்று வைத்தியம் செய்துகொள்ள வசதியாக இருக்கும். எனவே அந்த இடத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத் துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா? அங்கு ஏற்படுத்திக் கொடுத்தால் அரசுக்கு நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டி ருக்கிறோம். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்வார் என்பதற்காக விதிகளைத் தளர்த்தி செய்ய முடியாது. ஊருக்கு ஊர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க முடியாது. கொடைக்கானல் மலைப்பிராந்தியமாக இருப்பதால், ஒரு இடத்திலிருந்து இன் னொரு இடத்திற்கு நோயாளிகள் செல்வதற்கு சிரமமாக இருக்கு மானால், அதுபற்றி தனியாகப் பரிசீலிக்கலாம் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

1987 ஏப்ரல் 22]

திரு. கூடலூர் இ. வி. வேலு : தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் ஆரோக்கியமாக வாழ வேண்டுமென்ற அடிப்படையில் அங்கே துவக்கப்படுகிற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மருத்துவ மனைகளுக்கு மத்திய அரசு ஏதாவது தனியாக அந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்ற அடிப்படையில் நிதி ஒதுக்குகிறதா? அப்படி ஒதுக்கப்படுகிற நிதியின் மூலம் எந்த அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு மருத்துவமனை உருவாக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்காக என்று தனியாக ஒன்றும் ஒதுக்குவ தில்லை. எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மத்திய அரசு எப்படி அளிக்கிறதோ அதைப்போல அதற்கும் அளிக்கும்.

திருமங்கலம் தொகுதி, கூடக்கோவிலில் ஆரம்ப சுகாதார நிலையம்.

445—(*வினா எண் 12427) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதியில் உள்ள கூடக்கோவிலில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருமங்கலம் தொகுதியில் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் செக்கானூரணி என்ற கிராமத்தில் ஏற்கெனவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. மீண்டும் திருமங்கலம் தொகுதியில் கூடக்கோவிலில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு தற்போது அரசிடம் எந்த விதமான செயற்குறிப்பும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.